# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C No. 318 / 2015 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 2 |
| Name | : சடையாண்டி. |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.11.2023.

- - - - - - -

1, 2, 3, 5 எதிரிகள் ஆஜர். 4 வது எதிரி ஆஜரில்லை. மனுத் தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

முதல் விசாரணை:

நான் எழுமலையில் குடியிருக்கிறேன். ஆஜர் எதிரிகளைத் தெரியும். அ.சா.1 என் பெரியப்பா மகன். சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்னர் இரவு சுமார் 2 மணிக்கு அ.சா.1 ராமர் அவரின் வீட்டின் திண்ணையில் படுத்துத் தூங்கிக்கொண்டிருக்கும்போது, ராமருடைய சத்தம் கேட்டது. எனது வீடு அவர் வீட்டிற்கு அருகில்தான் உள்ளது. நானும், என்னைப் போல் சத்தம்கேட்டு சுப்பையாவும் ஓடிவந்தார். அப்போது நான் சம்பவ இடத்தில் சென்று பார்க்கும்போது எதிரிகண்ணன் கையில் அரிவாளோடு

நின்றுகொண்டிருந்தார். என்னவென்று ராமரிடம் கேட்டபோது, கண்ணன் என்ற வாசிமலை, கோமதி, முத்துலெட்சுமி, பாபு கணக்கத்தேவன், வாசிமலை ஆகியோர்கள் இவனை வெட்டி தொலைத்தால்தான் சொத்துக் கிடைக்கும் என்று சொல்லி கண்ணன் என்ற வாசிமலை, ராமரை வெட்டியதாக என்னிடம் கூறினார். நானும், சுப்பையாவும் வருவதைப் பார்த்து எதிரி கண்ணன் அரிவாளோடு தெருப்பக்கம் ஓடிவிட்டார். அதன்பின்னர் நாங்கள் காவல் நிலையத்திற்கு வந்தோம். நான், என் பையன், சுப்பையா ஆகிய மூவரும் ராமரோடு காவல் நிலையத்தில் உடனிருந்தோம். இரவு நேரம் என்பதால் மெமோ கொடுத்து உடனடியாக ராமரை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லுமாறு கூறினார்கள். அதனடிப்படையில் நாங்கள் உசிலம்பட்டி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்குச் சென்று ராமரைச் சேர்த்தோம். சேர்க்கும்போது நானும் உடனிருந்தோம். அங்கு அவருக்கு முதலுதவி செய்துவிட்டு, அவருக்கு காயம் அதிகமாக இருந்ததால் மதுரை ராசாசி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்துவிட்டார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை - இல்லை.

ஒப்பம் / திரு. P.S. ரஸ்கின் ராஜ், 16.11.23.
சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.